**தமிழ் நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் திருமதி. மா. ஆர்த்தி, இ. ஆ. ப**

**ந.க. எண் : 2349/ஆ2/நா.மு - 44/ ஒபக/2023, நாள்: 12.12.2023**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நான் முதல்வன் திட்டம் - 2023 - 2024 கல்வியாண்டு – அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற உயர்கல்வி வழிக்காட்டி ஆசிரியர்களுக்கான மதிப்பீடு தேர்வு நடைபெறுதல் மற்றும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து

*******

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் முதல் மாவட்ட அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. அப்பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களே இந்த வருடத்திற்கான உயர்கல்வி வழிக்காட்டி ஆசிரியர்கள் ஆவார்கள். இதுவரை பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக ,வருகின்ற டிசம்பர் மாதம் 19 ஆம் தேதியும், இரண்டாம் கட்டமாக, பயிற்சி பெறவிருக்கும் உயர்கல்வி வழிக்காட்டி ஆசிரியர்களுக்கு டிசம்பர் 22 ஆம் தேதியும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் அடிப்படையில் மதிப்பீடு தேர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பொறுப்புகள்:</u>**

1. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இருந்தும் ஒரு பள்ளிக்கு 1 : 250 மாணவர்களுக்கு ஒரு உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் வீதம் உயற்கல்வி வழிகாட்டல் பயிற்சி பெற்ற / பயிற்சி பெறவிருக்கும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் மட்டும் EMIS இணைய தளத்தில் தங்களது தகவல்களை வருகின்ற 14.12.2023க்குள் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்திடுமாறு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
2. அதனையடுத்து,அரியலூர்,செங்கல்பட்டு,சென்னை,கோயம்புத்தூர்,தர்மபுரி,கன்னியாகுமரி,கரூர்,கிருஷ்ணகிரி,மதுரை,மயிலாடுதுறை,நாகப்பட்டினம்,நாமக்கல்,பெரம்பலூர், புதுக்கோட்டை,ராமநாதபுரம்,சேலம்,சிவகங்கை,தென்காசி,தஞ்சாவூர்,நீலகிரி,தேனி ,தூத்துக்குடி,திருநெல்வேலி,திருப்பூர்,திருவள்ளூர்,திருவாரூர்,திருச்சி,விருதுநகர்,

திண்டுகல், ஈரோடு ஆகிய 30 மாவட்டங்களில் பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக, 19 ஆம் தேதி மதிப்பீடு தேர்வானது நடத்தப்படவுள்ளது. (**பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல்கள் மாவட்ட வாரியாக இணைப்பு -1 இல் வழங்கப்பட்டுள்ளது.**)

3. இரண்டாம் கட்டமாக,கடலூர்,கள்ளக்குறிச்சி,காஞ்சிபுரம்,ராணிப்பேட்டை,திருப்பத்தூர், திருவண்ணாமலை,வேலூர், விழுப்புரம் ஆகிய 8 மாவட்டங்களில் பயிற்சி பெறவிருகின்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு டிசம்பர் 22 ஆம் தேதி மதிப்பீடு தேர்வு நடைபெறவுள்ளது.
4. அம்மதிப்பீட்டுத் தேர்வினை மடிக்கணினி, ஸ்மார்ட் ஃபோன் அல்லது Hi Tech Lab போன்றவற்றின் வாயிலாக பயிற்சி பெற்ற அனைத்து உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களும் மேற்கொள்ளுதல் வேண்டும்.
5. 60 கேள்விகளை உள்ளடக்கிய இத்தேர்வானது ஒரு மணி நேரம் நடைபெறும். இம்மதிப்பீடு சார்ந்த விளக்கப்படம் அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் விரைவில் பகிரப்படும்.

அனைத்து அரசுப் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மேற்காண் வழிக்காட்டுதல்களை எடுத்துரைத்து அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இம்மதிப்பீடு முழுமையாக நடைபெறுவதை உறுதி செய்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு -1**

மாவட்ட வாரியாக பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல்கள்

மா நில திட்ட இயக்குநருக்காக

**பெறுநர்**

**அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்**